# பரலோகத்திலே




**பின்பு அந்த எழுபதுபேரும் சந்தோஷத்தோடே திரும்பிவந்து: ஆண்டவரே, உம்முடைய நாமத்தினாலே பிசாசுகளும் எங்களுக்குக் கீழ்ப்படிகிறது என்றார்கள். அவர்களை அவர் நோக்கி: சாத்தான் மின்னலைப்போல வானத்திலிருந்து விழுகிறதைக் கண்டேன். இதோ, சர்ப்பங்களையும் தேள்களையும் மிதிக்கவும், சத்துருவினுடைய சகல வல்லமையையும் மேற்கொள்ளவும் உங்களுக்கு அதிகாரங்கொடுக்கிறேன்; ஒன்றும் உங்களைச் சேதப்படுத்தமாட்டாது. ஆகிலும், ஆவிகள் உங்களுக்குக் கீழ்ப்படிகிறதற்காக நீங்கள் சந்தோஷப்படாமல், உங்கள் நாமங்கள் பரலோகத்தில் எழுதியிருக்கிறதற்காகச் சந்தோஷப்படுங்கள் என்றார். (லூக் 10:17-20)**

இங்கு ஆண்டவர் தாம் தேர்ந்தெடுத்து ஊழியத்திற்கு என அனுப்பின 70 பேரிடம் மேற்கண்டவாறு கூறினார் **(லூக் 10:1)**. இன்று தேவனால் இரட்சிக்கப்பட்டு, அபிஷேகிக்கப்பட்டு, அப்பா பிதாவே என்று கூப்பிட தக்க புத்திர சுவிகார ஆவியை உடையவர்களாகிய நம் ஒவ்வொருவருக்கும் பிரதான கட்டளையாக **மத் 28:19,20** கொடுக்கப்பட்டிருக்கிறது. “**ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம்பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார். ஆமென்.**” எனவே அந்த 70 நபர்களுக்கும் கொடுக்கப்பட்ட விஷேசித்த வரங்களை போல, இன்று விசுவாசிகளான நம் ஒவ்வொருவருக்கும் விஷேசித்த கிருபைகள் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதன் மூலம் தேவன் வல்லமையான காரியங்களை நம் ஒவ்வொருவர் மூலமும் செய்து வருகிறார். ஆம், ஆண்டவருக்குள்ளாய் நாம் வாழும்பொழுது நம் வாழ்விலும், நமது மூலமாய் பிறர் வாழ்விலும் தேவன் கிரியை செய்வதை, அதிசயங்களை செய்வதை நாம் கண்கூடாய் காணலாம். ஒரு

இயற்க்கைக்கு அப்பாற்ப்பட்ட வாழ்க்கையை வாழ்வத்ற்கே ஆண்டவர் நம் ஒவ்வொருவரையும் இவ்வாறு அழைத்திருக்கிறார்.

ஆனால் இங்கு நாம் முக்கியமாக கவனிக்க வேண்டியது "**ஆகிலும், ஆவிகள் உங்களுக்குக் கீழ்ப்படிகிறதற்காக நீங்கள் சந்தோஷப்படாமல், உங்கள் நாமங்கள் பரலோகத்தில் எழுதியிருக்கிறதற்காகச் சந்தோஷப்படுங்கள் என்றார். (லூக் 10:20)** " என்பதாகும். ஆம், இதை இன்னொரு விதத்தில் கூறுவதாய் இருந்தால், ஆண்டவர் நமக்கு தந்திருக்கிற விஷேசித்த ஆவிக்குரிய வரங்கள், ஆசிர்வாதங்கள் அல்லது, பூமிக்குரிய நன்மைகள், ஆஸ்திகள், மேன்மைகள் என எதை காட்டிலும், நம்மை ஆண்டவர் இரட்சித்திருக்கிறார். ஒரு நாள் நாம் ஆண்டவரோடு என்றென்றும் இருப்போம் என்ற இந்த ஒரு நம்பிக்கையே நமக்கு மேலான மகிழ்ச்சி தருவதாய் இருக்க வேண்டும்.

நாம் பெரிய சபைத்தலைவராய், சுவிசேஷகராய், தீர்க்கதரிசியாய் காணப்படுகிறவர்களையே அல்லது தேவனால் வல்லமையாய் பயன்படுத்த படுகிறவர்களையே, ஆண்டவரால் ஆசிர்வதிக்கப் பட்டவர்களாய் விஷேசமானவர்களாய் காண்கிறோம். மற்றவர்களையோ சாதாரண சபை விசுவாசிகள் என்று கூறிவிடுகிறோம். ஆனால் ஆண்டவருடைய பார்வையில் தனக்காக ஒரு தேவ பிள்ளை எந்த அளவிற்கு கிரியை செய்கிறான் என்பதை காட்டிலும், அவன் தன்னோடு இருப்பதை, தான் இரட்சிக்கப்பட்டிருப்பதை எந்த அளவிற்கு மேன்மையாக எண்ணுகிறான் என்பதையே அவர் காண்கிறார்.

ஊழியங்கள், வரங்கள் என எல்லாம் முக்கியமானவைகளே. இவற்றை செய்ய, பெற விசுவாசிகளாகிய நாம் ஒவ்வொருவரும் முயல வேண்டும், ஆனால் இவை எல்லாவற்றை காட்டிலும், நம்மை ஆண்டவருக்குள்ளாய் நிறுத்தி, நாம் பெற்ற இரட்சிப்பின் அனுபவத்தை நினைத்து மகிழ்ந்து, இவ்வுலக வாழ்வின் முடிவு பரியந்தம் அதை விட்டுவிடாமல் நிலைத்து நின்று, பரலோகத்திலும் எனக்கு இடம் உண்டு என்ற நிச்சயம் உடையவர்களாய் வாழ்வதையே ஆண்டவர் மேன்மையாக காண்கிறார். மேலும் கடைசி நாளில், ஆண்டவர் பரலோகத்தில் தேவ பிள்ளைகள் அனைவரையும் கூட்டி சேர்க்கும் பொழுது, இவ்வுலகத்தில் சாதாரண வாழ்க்கை வாழ்ந்து, யாருக்கும் அவ்வளவு அறிமுகமாய் இராத விசுவாசிகள், மேன்மையான வரவேற்பை பெறுவார்கள்.

இவை யாவும் ஒன்றை மாத்திரமே நமக்கு சுட்டி காட்டுகிறது. அதாவது நாம் நமது வேத அறிவை வளர்த்து கொள்வதை காட்டிலும், வரங்களை நாடி தேடுவதை காட்டிலும், இன்னும் ஆண்டவருக்கு எவ்வாறு ஊழியம் செய்வது என்பதை யோசிப்பதை காட்டிலும், திருச்சபை விசுவாசிகள் எல்லோருடன் கூட நமது பெயரும் பரலோகத்தில் எழுதப்பட்டிருக்கிறதே, அது கிறுக்கப்பட்டு போகாதபடி நமது தனிப்பட்ட வாழ்க்கையை, சாட்சியை ஜாக்கிரதையாய் காத்து கொள்ள வேண்டும் என்ற எண்ணம் ஏற்படும். நாம் ஒருபோதும், நம்மை மற்றவரைவிட மேன்மையாக எண்ணாமல், "**இந்த மகத்துவமுள்ள வல்லமை எங்களால் உண்டாயிராமல், தேவனால் உண்டாயிருக்கிறதென்று விளங்கும்படி, இந்தப் பொக்கிஷத்தை மண்பாண்டங்களில் பெற்றிருக்கிறோம்.**" **(2 கொரி 4:7)** என்பதை உணர்ந்து, சரீரமாகிய இந்த

மண்பாண்டத்தை விட்டு விலகி எப்பொழுது ஆண்டவர் அழைத்தாலும், பரலோகில் அவரோடு கூட இருக்க ஆசைப்பட்ட பவுலை போல **(2 கொரி 5:8)** நாமும் வாஞ்சையாய் இருப்போம். ஆம், புதிய ஏற்பாட்டின் மிக பெரிய சுவிஷேச ஊழியமும், சபை ஊழியமும், அற்புத அடையாளங்கள், நிருபங்கள் என பலவித ஊழியங்கள் இருந்தாலும், அவர் ஆசைப்பட்டதெல்லாம், மற்றவர்களுக்கு போதித்த நான் தானே ஆகாதவனாய் போகாதபடி சரீரத்தை ஒடுக்கி கீழ்படுத்தி, பரலோக ஜீவ புஸ்தகத்தில் பெயர் கிறுக்கப்பட்டு போகாதபடி காத்து கொள்ள வேண்டும் என்பதேயாகும்.

ஏனெனில் ஆண்டவரோடு மூன்று வருடங்கள் இருந்தும் ஆகாதவனாய் போன யூதாஸ் காரியோத்து போல **(அப் 1:16-20)**, ஆண்டவருடைய உபதேசம் கடினம் என்று கூறி அவரை பின்பற்றமல் பின் வாங்கி போன அநேக சீஷர்களை போல **(யோ 6:59-66)**, தங்களுடைய ஆஸ்தியில் ஒரு பகுதியை வஞ்சித்து புதிய ஏற்பாட்டு சபையில் ஆவியானவரிடம் பொய் சொன்ன அனனியா, சப்பீராள் போல **(அப் 5:1-10)**, இன்னும் வேறொரு கிறிஸ்துவை, வேறொரு சுவிஷேசத்தை பின்பற்றி, பின்வாங்கி போன சிலரை போல நாம் ஆகாதபடி ஜாக்கிரதையாய் இருக்கவே ஆண்டவர் அந்த 70 பேரிடம் கூறியதை, இன்று நம்மிடமும் கூறுகிறார். எனவே பரலோகத்தில் நம் பெயர் எழுதப்பட்டிருப்பதற்காக சந்தோஷப்பட்டு, அதே நேரத்தில் அது கிறுக்கப்பட்டு போகாதபடி இருக்க ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும். அற்புத அடையாளங்கள் நம் வாழ்வில் நடப்பதும், நமது மூலமாய் பிறர் வாழ்வில் நடப்பதும் முக்கியமே. ஆனால் அதை காட்டிலும் நாம் கிறிஸ்துவுக்கும், கிறிஸ்து நமக்கும் முக்கியமானவர். ஆமென், அல்லேலூயா.